**Q.P. Code : 13207**

**Second Semester B.Com./B.B.A./B.H.M. Degree Examinations, May/June 2019**

*(CBCS Scheme – Freshers)*

**TAMIL LANGUAGE**

**Part-I, Paper-II**

*Time : 3 Hours]* *[Max. Marks : 70*

I. விரிவான விடை தருக :

1. திருவையாறு திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் தனக்குக் காட்சியளித்த முறையினைத் திருநாவுக்கரசர் வழி நின்று விளக்குக.

(அல்லது)

சிவபெருமான் குறித்து மாணிக்கவாசகர் பாடியுள்ள பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்து வரைக. **(10)**

2. மனித வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நீதிகளை ஔவையார் பாடல்கள் வழி நின்று விளக்குக.

(அல்லது)

ஒட்டக்கூத்தர் பாடிய பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்து வரைக. **(10)**

II. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக :

1. பெற்றம்ஊர்ந்த பிரமாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே

(அல்லது)

கீளார் கோவணமும் திருநீறுமெய் பூசிஉன்றன்
தாளே வந்தடைந்தேன். **(4)**

2. -------------------------------- மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்

(அல்லது)

மான்அவன் நான் அந்த வாளரி வேங்கை **(4)**

Scanned by CamScanner

(2 × 3 = 6)

III. **இரண்டிற்கு** ஆசிரியர் குறிப்பு வரைக :

1. திருஞானசம்பந்தர்
2. மாணிக்கவாசகர்
3. ஔவையார்
4. புகழேந்தி

(2 × 14 = 28)

IV. எவையேனும் **இரண்டினைத்** திறனாய்க :

1. தண்ணீரும் பண்பாடும்
2. குட்டி மயில்
3. இடியுடன் கூடிய மழை நாளில்
4. வெறுங்கூட்டுக்குள்

V. மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. (8)

இலக்கியம் என்பது கலை, கற்பனை, இன்பம் உடையதாகத் திகழ்வது; மொழி எனும் ஊடகத்தினூடே இயங்குவது; மொழி நிலைபெற இன்றியமையா இடம் வகித்தும், மனித வாழ்வின் உணர்வுகளையும் உண்மைகளையும் அனுபவப்பூர்வமாகக் கலை நுட்பத்தோடு எடுத்தியம்புவது; அறச்சிந்தனைகளை வலியுறுத்துவது; மக்களின் வாழ்வியல் விழுமியங்களை மதிப்பிடுவது; நுனிநுட்பம் வாய்ந்ததாகவும், இயற்கை அழகைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும் அமைவது; படைப்பாளன், தான் சமூகத்திற்கு எடுத்தியம்ப எண்ணும் இலக்கினை முன்மொழிவதாகவும், வெற்றெனத் தொகுத்தல் இன்றி, வாழ்க்கைப் பிழிவினைச் சொற்செறிவுடன் புலப்படுத்தும் ஆழ்நிலை கருத்துப் பதிவாகவும் விளங்குவது எனும் கருத்துக்கு வர இயலுகிறது.

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டு, மனித மனத்திற்கு இன்பம் நல்குவதாயும், ஒரு கட்டமைப்பிற்குள் இருப்பதாயும், விளங்குவதாகும் என்பது, மனிதனுடைய மொழியோடு பின்னிப் பிணைந்தது என்பதும் புலனாகிறது.

---

Scanned by CamScanner